**<u>07/02/2024</u>**

**<u>OS. No. 57/2022</u>**

<u>பி.வா.சா. 2. வாசுகி</u>

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் 2 வது சாட்சி. பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் பி.வா.சா.ஆ.3.

<u>குறுக்கு விசாரணை</u>

சாட்சி சொல்ல 1ம் பிரதிவாதி அழைத்து வந்தார். என்னுடைய உடன் பிறந்த சகோதரி கலா அவர்களின் மகன் 1ம் பிரதிவாதி ஆவார். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியும். 1ம் பிரதிவாதி 15.02.1977 ல் பிறந்தாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி கலா அவர்கள் 1986 ல் இறந்துவிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி கலா 10.08.1976 ல் உடல் நிலை சரியில்லாமல் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி கலா 1976 ல் இறந்தபிறகு 1977 ல் என்னுடைய மாமா வரதராஜன் 1ம் வாதி குமாரியை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரியல்ல. என்னுடைய மாமா வரதராஜனின் அண்ணன் கோவிந்தசாமி 1ம் வாதியின் சகோதரி பத்மாவதி என்பவரை திருமணம் செய்துக்கொண்டதால் அவரை பார்ப்பதற்காக 1ம் வாதி அடிக்கடி வரதராஜன் வீட்டிற்கு வருவார் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியை என்னுடைய மாமா வரதராஜன் சட்டப்படி திருமணம் செய்துக்கொண்டதால் வாதிகள் மற்றும் 1 ம் பிரதிவாதி வரதராஜனுக்கு வாரீசுகள் என்றால் சரியல்ல. என்னுடைய மாமா 1ம் வாதியை 2வது திருமணம் செய்துக்கொண்டதால் மனஉலைச்சலுக்கு ஆளகி என்னுடைய சகோதரி கலா இறந்துவிட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1 ம் பிரதிவாதிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.